## முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
## முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
## முதன்மை சார்பு நீதிபதி.

எ.ம.சா.1 தேதி. 22.09.2025

| MCOP. No. | 173/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | அலமேலுமங்கை | க/பெ. | |
| வயது | | தொழில் | தட்டச்சர் |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 68 Y 3420 என்ற இரண்டு சக்கர வாகனம் எங்கள் அலுவத்திற்கு ஆய்விற்கு கடந்த 14.02.2023 அன்று ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. மேற்படி வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் பெயர் தங்கராசு த/பெ. அய்யாக்கண்ணு ஆகும். மேற்படி ஓட்டுனர் தங்கராசுக்கு விபத்து தேதியில் ஓட்டுனர் உரிமம் இல்லாத காரணத்தினால் மோட்டார் வாகன ஆய்வின்போது அவருக்கு தண்டம் விதிக்கப்பட்டு E Chellan வழங்கப்பட்டது. மேற்படி E.Chellan வழங்கப்பட்ட தண்டத்தினை செலுத்திய பிறகுதான் அந்த வாகனத்தை கொடுப்போம். இந்த ஆய்வறிக்கையின் படி மேற்படி வாகனத்தை ஓட்டு நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். 14.02.2023 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை **சா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

### மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

நான் மயிலாடுதுறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தற்போது தட்டச்சராக வேலை பாரத்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே நான் சாட்சியம் அளிக்கிறேன். மோட்டார் வாகன ஆய்வினை மேற்கொள்வது எனது பணியல்ல. மேற்படி நபருக்கு ஓட்டுனர் உரிமம் ஆய்வின் போது காட்டப்படாததால் ஓட்டனர் உரிமம் இல்லை என்று கூற இயலாது என்றால் சரியல்ல. விபத்து காலத்தில் ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தது என்றால் சரியல்ல. இந்த வட்டார

போக்குவரத்து அலுவலகம் இல்லாமல் வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றிருந்தால் அதைப்பற்றி என்னால் சொல்லமுடியாது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.